பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 09 வெள்ளிக்கிழமை 22.04.2022 கதிர் 168

### இனி இது ரகசியம் அல்ல!



புதிய அமைச்சரவை பொறுப்பேற்ற பின்னர் பிரதமரின் மீதும் அவரின் அரசின் மீதும் நம்பிக்கை உள்ளதா என்று சோதிப்பதாயின் அதைக் காட்ட வேண்டிய தளம் – களம் – நாடாளுமன்றம் தான்.

நம்பிக்கை வாக்கெடுப்பு அங்குதான் மேற் ☞2

# ஆளும் கட்சி எம்.பிக்கள் கூட்டத்தில் பிரதமரின் மீது நம்பிக்கை தெரிவிப்பு




## அரசாங்கத்தை வலுவாகக் கொண்டு செல்ல முடிவாம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தை வலுவாகக் கொண்டு செல்லும் முன்மொழிவு, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது.

எதிர்கால நடவடிக்கைகளை புதிய அமைச்சர்கள் வலுவாக முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுப்பதாக இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் உறுதி வழங்கியுள்ளனர் எனப் பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது. ☞07

## ‘20’ நீக்கப்பட்டால் இடைக்கால அரசின் பிரதமராகப் பதவியேற்க ரணில் தயாராம்!



இருபதாவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களை நீக்கி விட்டு, இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்தால், அதன் பிரதமர் பதவியை பெற முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தயாராக இருக்கிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

இருபதாவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போது, ☞2


## இந்திய உதவியில் டீசல் நாட்டுக்கு வந்து சேர்ந்தது

இந்தியக் கடன் எல்லையின் கீழ் இந்தியாவிலிருந்து மேலும் 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசலை இலங்கை நேற்றுமுன்தினம் பெற்றுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் சுமார் 4 இலட்சம் மெட்ரிக் தொன் பல்வேறு வகையான எரிபொருள்கள் ஏற்கனவே இந்திய உதவியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி டீசல் ☞07

## சந்திரிகா - அமெ.தூதுவர் பெண்மணிகள் சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பது ☞2

## அனைத்து அதிகாரங்களையும் கொண்டவரே உண்மைகள் வெளிப்படாமைக்குக் காரணம்!

### ஈஸ்டர் தாக்குதல் குறித்து கர்த்தினால் சீற்றத்துடன் கருத்து



உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலை நாட்டுவார் என ஜனாதிபதித் தேர்தல் மேடையில் முழக்கமிட்டு, ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர் பின்னர் அந்த வாக்குறுதிகள் அனைத்தையும் புறந்தள்ளி விட்டு செயற்பட்டு வருகிறார் என கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் மூன்றாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்து ☞2

## உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு சபையில் அஞ்சலி



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று மூன்று வருடம் பூரணமாகியுள்ள நிலையில் இதனை நினைவு கூர்ந்து, மரணித்தவர்களுக்காக நேற்று நாடாளுமன்றத்தில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. ☞07

## ‘கோட்டா கோ கமவில்’ நேற்று கறுப்பு, வெள்ளைக் கொடிகள்!



காலிமுகத்திடலில் – கோட்டா கோ கமவில் – அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை ☞2

## 13 பேர் இன்று அதிகாலை தனுஷ்கோடி சென்றடைவு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.22

இலங்கையில இருந்து 3 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேர் இன்று அதிகாலை தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

இலங்கையில் நிலவும் கடும பொருளாதார நெருக்கடி காரணமாக ☞2

## சிறுபான்மை அரசை அமைக்கவும் எதிர்க்கட்சிகள் முன்வர வேண்டும்

### சகபாடிகளுக்கு சரத் பொன்சேகா அழைப்பு



நாட்டின் தற்போதைய நிலைமைக்கு ஏற்ப தேவையானால் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைக்க எதிர்க்கட்சி தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் ☞2

## இந்தியாவிலிருந்து நேரடியாக இலங்கைக்கு மின் விநியோகம்

### பழைய திட்டம் குறித்து மீண்டும் பேச்சுகள் ஆரம்பம் கடல் ஊடாகக் கேபிள் அமைத்து மேற்கொள்ளப்படும்

இந்தியா மற்றும் இலங்கையின் மின் கட்டமைப்புகளை இணைப்பது தொடர்பாகப் பேச்சு நடத்தப்பட்டுள்ளதாக இலங்கையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான இந்தப் பேச்சு ஆரம்பக் கட்டத்தில் இருப்பதாக இலங்கை மின் சக்தி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா கூறியுள்ளார். ☞2



வசந்த பெரேரா

### ரம்புக்கனை சூட்டுச் சம்பவம்

## 3 பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு!

கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், றம்புக்கனை பொலிஸ் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் றம்புக்கனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் ☞07

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்ளப்பட வேண்டும். ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டடத்தில் அந்த நம்பிக்கை வாக்கெடுப்பை நிரூபித்தார் என்ற சாரப்பட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இப்படிப் பிரதமர் மீது நம்பிக்கை உள்ளது என்று காட்ட வேண்டிய கட்டாயம் – தேவைப்பாடு – இரண்டு காரணங்களினால் எழுந்தன என்று உள்ளகத் தகவல்கள் கிசுகிசுக்கின்றன.

ஒன்று – இரண்டொரு தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியைச் சந்தித்த ஆளும் கட்சித்தரப்பின்பின்வரிசையைச் சேர்ந்த பதின்மூன்று எம்.பிக்கள், உடனடியாக இடைக்கால அரசு ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுங்கள், இல்லையேல் மனச்சாட்சிப் படி செயற்பட நேரிடும் என எச்சரிக்கைப் பாணித் தகவலை நேரில் தெரிவித்தனர் என்று பரபரப்பு செய்திகள் வெளியாகின. பதின்மூன்று எம்.பிக்கள் இன்றைய நிலையில் ஆளும் தரப்பிலிருந்து வெளியேறுவது என்பது ஆளும் தரப்பு நாடாளுமன்றப் பெரும்பான்மையை இழந்தமையை ஐயத்துக்கு அப்பால் உறுதிப்படுத்திவிடும். அத்தகைய சூழலில் எக்காரணம் கொண்டும் அவர்களை இழக்க முடியாது என்பது ஆளும் தரப்பின் இன்றைய இக்கட்டு.

அதேசமயம், அந்தப் பதின்மூன்று எம்.பிக்கள் இடைக்கால அரசைக் கோருகின்றார்கள் என்றால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இப்போதைய அரசை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று அர்த்தம். அத்தோடு அந்த ஆட்சேபனையின் அடிப்படையில் அவர்கள் வெளியேறினால் மஹிந்தரின் அரசு சிறுபான்மை அரசு என்பது திட்டவட்டாக உறுதியாகி விடும்.

அப்படி ஏதும் ஆளும் தரப்புக்குள் பிளவுகள், பிரிவுகள் இல்லை, எல்லோரும் தமக்கு ஆதரவாக நிற்கின்றார்கள் என்று காட்ட வேண்டிய கட்டாயம் பிரமருக்கு. அதனால்தான் நேற்றைய கூட்டம்.

ஆனால் அது எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்கின்றன வேறு சில வட்டாரங்கள்.

பிரதமர் தமக்குப் பெரும்பான்மை எம்.பிக்களின் ஆதரவு உள்ளது என்ற பாணியைக் காட்டமுயல்கின்றார், ஆனால் அவரது நேற்றைய கூட்டத்தில் ஆளும் தரப்பு எம்.பிக்களில் ஆக எண்பது பேர் வரையில்தான் சமுகம் தந்தனர், வேறு இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியைச் சந்தித்து வலியுறுத்திய பின்வரிசை எம்.பிக்கள் 13 பேரில் எவரும் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றவில்லை, அந்த வகையில் நேற்றைய கூட்டம் பிரதமருக்கு வெற்றியல்ல என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இனி, நேற்றைய கூட்டத்தைப் பிரதமர் அழைத்து நடத்திக் காட்ட முயன்றமைக்கான அடுத்த காரணத்தைப் பார்ப்போம்.

ஏற்கனவே இப்பத்தியில் நான் கோடி காட்டியபடி அண்ணன் – தம்பி முரண்பாடு வெளியே தெரியாமல் முட்டி மோதுவதாகக் கூறப்படுகின்றது.

இடைக்கால அரசை அமைக்கக் கோரும் பதின்மூன்று எம்.பிக்களின் வற்புறுத்தல் கூட தம்பியின் ஆலோசனையின் பேரில் முன்னெடுக்கப்பட்ட ஒரு நாடகம் என்று கருத்தும் உண்டு.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து அகற்றினால், ஆட்சியதிகாரத்தில் இருக்கும் ஒரே ராஜபக்ஷ நான்தான், குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டியாகிவிட்டது என்று பொதுமக்களிடம் காட்டி, எளிதாக மக்கள் கிளர்ச்சியை அடக்கலாம் எனக் கனவு காண்கின்றார் தம்பியார்.

அப்படியல்ல, நான் உறுதியாகவும், ஸ்திரமாகவும் காலூன்றித்தான் நிற்கிறேன், என்னை அசைக்க முடியாது என்று தம்பிக்குக் காட்ட விழைகின்றார் அண்ணன்.

அதனால்தான் நேற்றைய கூட்டம் கூட்டப்பட்டு, பிரதமர் மீது நம்பிக்கை தெரிவிக்கும் உறுதிமொழி எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம், வரும் திங்கட்கிழமை புதிய அமைச்சரவையின் கூட்டத்தின் போது, இறுதியாகக் கொண்டு வரப்பட்ட அரசமைப்புக்கான 20ஆவது திருத்தத்தை விலக்குவதற்குரிய பரிந்துரைப் பிரேரணை ஒன்றைத் தாம் அங்கு சமர்ப்பிப்பார் என்று பிரதமர் குறிப்பிட்டிருக்கின்றார். 20ஆம் திருத்தத்தை கைவாங்கி, மீண்டும் 19ஆவது திருத்த ஏற்பாடுகளைக் கொண்டு வருவோம் என நாடாளுமன்றத்திலும் பிரதமர் அறிவித்தார்.

இதன் அர்த்தம் 20ஆம் திருத்தம் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட கட்டுமட்டில்லா அதிகாரங்கள் திரும்பப் பறிக்கப்படப்போகின்றன என்பதுதான். அவை மீண்டும் நாடாளுமன்றத்தினதும், பிரதமரினதும் கைகளுக்கு வரப் போகின்றன என்பதுதான். இந்த முடிவையும் அறிவிப்பையும் கூட பிரதமர் தம்பாட்டிலேயே – ஜனாதிபதியின் கலந்தாலோசனையின்றியே – வெளியிட்டு முன்னெடுக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

திங்கட்கிழமை இது தொடர்பான அரசமைப்புத் திருத்தப் பரிந்துரையை அமைச்சரவையில் பிரதமர் சமர்ப்பிக்கும் போது, ஜனாதிபதி அதற்கு முட்டுக்கட்டை போட்டு, காலத்தை இழுத்தடிக்கும் தந்திரத்தை முன்னெடுப்பார் என்று உள்வீட்டு வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இதற்கிடையில், உபசபாநாயகர் தெரிவு நாடாளுமன்றத்தில் இப்போது நடக்காது, அடுத்த மாத முற்பகுதியில் தான் என்பது உறுதியாகியுள்ளது. ஏனென்றால் இம்மாதம் 30ஆம் திகதியிலிருந்துதான் அப்பதவியைத் தாம் ராஜினாமாச் செய்கின்றார் என்றே உப சபாநாயகர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தமது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். அதனால் அதன் பின்னர் தான் – அடுத்த மாதமுற்பகுதியில்தான் – அந்தத் தெரிவுக்கான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெறும்.

இதேசமயம், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் விதத்திலான அரசமைப்புத் திருத்தம் ஒன்று – நேற்றும் முன்தினமும் இப்பத்தியில் நான் குறிப்பிட்டபடி – நேற்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் – அதன் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவினால் – தனிநபர் பிரேரணையாக சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

தனிநபர் பிரேரணை என்பதால் இது நீண்ட காலம் இழுத்தடிக்கப்பட வாய்ப்பு உண்டு என இப்பத்தியில் சுட்டிக்காட்டி வந்தேன்.

இவ்விடயத்தில் மிகப்பெரிய கால தாமதத்துக்கான வாய்ப்பு ஒன்றை இல்லாமல் செய்திருக்கின்றார் சுமந்திரன் எம்.பி.

அதனால் இந்தப் பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வருவதற்கான வாய்ப்புகள் மிகப் பிரகாசமாகியிருக்கின்றன.

சுமந்திரன் எடுத்த அந்த தந்திரோபாய நடவடிக்கை என்ன? அது எப்படிச் சாத்தியமாயிற்று? விவரத்தை நாளை இப்பத்தியில் பார்ப்போமா வாசகர்களே...?

- மின்னல் -

## 13 பேர் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்கள் தமிழகம் நோக்கி அகதிகளாகச் செல்கின்றனர்.

இன்று அதிகாலையும் 13 பேர் தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளனர் என்று அதிகாலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இவ்வாறு தமிழகம் சென்றவர்களில் 4 ஆண்களும் 7 பெண்களும் 2 சிறுவர்களும் அடங்குகின்றனர். இவர்கள் அனைவரும மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

## ‘20’ நீக்கப்பட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் அப்படியான பதவியை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொள்ளாது எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ருவான் விஜேவர்தன இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

“தற்போதைய ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி தயாரில்லை. அத்துடன் தற்போது தேர்தல் ஒன்றுக்கு செல்வதும் பொருத்தமற்றது. இந்த நேரத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவதால், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

தற்போது நாட்டுக்கு இடைக்கால அரசாங்கம் ஒன்று தேவைப்படுகிறது. இந்த இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக மக்களுக்கு தேவையான உடனடியான நிவாரணங்களை வழங்கி, அதன் பின்னர் தேர்தலுக்கு செல்வது பொருத்தமானதாக இருக்கும்.

அப்படியான இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டால், ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியை பெற தயாராக இருக்கின்றார். எனினும் 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு அதீதமான அதிகாரங்கள் இருக்கும் போது, பிரதமர்பதவியைபெறுப்பேற்பதில் அர்த்தமில்லை” – எனவும் ருவான் விஜேவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிறுபான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது தனிப்பட்ட கருத்தை வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியாகிய நாம் இந்தச் சவாலை எதிர்கொள்ள வேண்டும் என் பதே எனது தனிப்பட்ட கருத்து. ஜனாதிபதி பதவியும் பிரதமர் பதவியும் கிடைத்தால் சிறுபான்மை அரசாங்கத்தை அமைக்க தயாராக உள்ளோம். அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ள முதுகெலும்பு இருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் இன்னும் நாட்டின் முன்னேற்றத்திற்காக எதுவும் நடக்கவில்லை. எதிர்க்கட்சியாகிய நாம் இந்த நேரத்தில் சவாலை எதிர்கொள்ள வேண்டும். நாம் எப்போது ஆட்சியைக் கைப்பற்றினாலும் வீழ்ச்சியடைந்த நாட்டையே பொறுப்பேற்க வேண்டி இருக்கும்.

நமது நாடு திவாலாகிவிட்டதாக மறைமுகமாக கூறிவிட்டோம். இந்த நிலையிலும் முட்டாள்தனமான அரசாங்கத்தை அமைந்துள்ளனர். இம்முறை தங்களின் ‘பி’அணியை விளையாட அனுப்பியுள்ளனர். – என்றார்.

## ‘கோட்டா கோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னெடுத்து வருபவர்கள், ஜனாதிபதி செயலகத்தின் வளாகத்தில் நேற்று கறுப்பு, வெள்ளைக் கொடிகளைப் பறக்க விட்டு, ஈஸ்டர் ஞாயிறு உயிரிழப்புகளை ஒட்டிய தங்களது சோகத்தை வெளிப்படுத்தினர்.

2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் ஞாயிறன்று தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு நேற்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதனை முன்னிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விசேட பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன.

## அனைத்து...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். இதன்போது மேலும் உரையாற்றிய அவர் –

“ஈஸ்டர் தாக்குதலின் உண்மை வெளியிடப்படாமல் இருக்கும் செயற்பாடுகளின் பின்னணியில் இருப்பவர், நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் தன்வசப்படுத்திக் கொண்ட சிறப்பு அதிகாரம் படைத்தவர் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

“உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்களின் கூக்குரல்கள் வானத்தை நோக்கி முழக்கமிடுகின்றன. இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் அதன் பிரதிபலன்களை அனுபவிக்க நேரிடும் என முழுமையான நம்புகிறேன்” – என்றார்.

# நாடாளுமன்றுக்கு வந்தார் பஸில்



கொவிட் – 19 தொற்றால் பீடிக்கப்பட்டிருந்த முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றைய தினம் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தார்.

சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பின்வரிசையில் பஸில் ராஜபக்ஷ அமர்ந்திருந்தார் எனவும், அறைக்கு உள்ளே வரவில்லை எனவும் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

## சந்திரிகா - அமெ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாகவே மேற்படி சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்காக பெண் தலைவர்களின் உண்மையான பங்குபற்றலுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் எனவும் அமெரிக்கத் தூதுவர் மேற்படி சந்திப்பு தொடர்பில் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## இந்தியாவிலிருந்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் திட்டம் இலங்கையின் மின் விநியோகத்தைத் தடையின்றி அதிகரிப்பதற்கான மிகப் பெரிய நீண்டகால முயற்சியாக கருதப்படுகிறது.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் பரவலாக மின் துண்டிப்பு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இதன் மூலம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் இலங்கையில் சீனாவின் செல்வாக்கை குறைப்பதற்கும் இந்தியா எதிர்பார்த்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மின் விநியோக கட்டமைப்பை இணைப்பது தொடர்பான உடன்படிக்கை 2010 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டது. இந்த திட்டத்திற்கு இந்திய நாணய மதிப்பில் 4 ஆயிரம் கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டமையுடன் ஆயிரம் மெகா வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது.

இந்தியாவின் கடல் மட்டத்தில் இருந்து 25 மீற்றர் ஆழத்தில் 500 மீற்றர் இடைவெளியில் கேபிள் இணைப்புகள் அமைக்கும் சாத்தியங்கள் தொடர்பாகவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இலங்கை – இந்தியா இடையிலான இந்த மின் இணைப்பு கட்டமைப்பானது 360 கிலோ மீற்றர் தொலைவை கொண்டிருக்கும் எனவும் கூறப்பட்டது.

இந்த மின் இணைப்பானது தமிழகத்தின் மதுரையில் இருந்து இலங்கையின் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரத்திற்கும் செல்லும் வகையில் அமைக்கப்படலாம் என அப்போது கூறப்பட்டது.



# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை இணையத்தில் வெளியிடவேண்டும் – சஜித்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையை இணையத்தில் வெளியிட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று (வியாழக்கிழமை) உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

'3 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மிலேச்சத் தனமான பயங்கரவாதத் தாக்குதலில் நாம் எமது உற வுகளை இழந்தோம். இந்த பயங்கரவாதத் தாக்குத லால் நாடு என்ற ரீதியில் நாம் பல பாதிப்புக்களை எதிர்கொண்டோம்.

இந்த நேரத்தில், கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் நாம் ஒன்றைக் கூறிக்கொள்கிறோம்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கு எதிராகவும் பாரபட்சம் பாராது சட்டநடவடிக்கை எடுப் போம் என்றும் அவர்களுக்கு உச்ச தண்டனை கிடைக்க வழிவகை செய்வோம் என்றும் பேராயருக்கு நாம் எழுத்துமூலமாக இவ்வேளையில் அறியத்தருகிறேன்.

இன்று ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கத்தோலிக்க மக்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த நாட்டு மக்கள், பேராயர் மற்றும் எதிர்க்கட்சியாக எமக்கு என அனைவருக்கும் சந்தேகம் இருந்துகொண்டேதான் உள்ளது.

இதுதொடர்பான உண்மைகள் இன்னமும் வெளி வரவில்லை. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை இன்னமும் பொது மக் களுக்கு காண்பிக்கவில்லை. இதனை நாடாளுமன்ற இணையத்தில் வெளியிடவேண்டும் என நான் இவ் வேளையில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தாக்குதலின் பின்னகணியில் பாரிய சூழ்ச்சி யொன்று இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்திருந்தார். இதனைக் கண்டுபிடிக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் பிரதான கடமை யாகும். உண்மைகள் வெளிவர வேண்டும். உண்மை களை பேச வேண்டும்.



எனது தந்தையும் பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றில் தான் கொல்லப்பட்டார். அன்று எனக்கு இருந்த மன நிலை, இன்றும் என்னுள் இருக்கிறது. இதனால், ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையை என்னால் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

எனவே, இவர்களை கருத்திற்கொண்டு தகவல் களை மறைத்துக்கொண்டிருக்காமல், வெளிப்படையாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுதொடர்பாக புதிய விசாரணையை அரசாங்கம் நடத்த வேண்டும். இதில் கொழும்பு பேராயர் உள்ளிட்ட கத்தோலிக்க மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர் களை உள்வாங்க வேண்டும்.

இந்த விடயத்தில் நாம் யாரையும் பாதுகாக்கவே, காப்பாற்றவோ முற்படக்கூடாது' – என அவர் மேலும் தெரிவித்தார்.

## கட்டாய முகக்கவசம் அணிவதை நீக்கியது அரசியல் முடிவு அல்ல!

### சுகாதார அமைச்சு

கொரோனா கட்டுப்பாடு தொடர்பான நிபு ணர் குழுவின் முடிவைத் தொடர்ந்து கட்டா யமாக முகக்கவசம் அணிவதை தளர்த்து வதாகக் கூறிய சுகாதார அமைச்சர் பேராசிரி யர் சன்ன ஜயசுமண, இந்த முடிவை மீள்பரி சீலனை செய்யுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்குப் பணிப்புரை விடுத்ததாகத் தெரிவித்தார்.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் ராஜபக்ஷ எழுப்பிய கேள்விக்குப் பதி லளித்த அவர், பொது போக்குவரத்து மற்றும் உள்ளக இடங்கள் தவிர மக்கள் கட்டாய மாக முகக்கவசம் அணிவதை நீக்குவது அரசியல் முடிவு அல்ல என்றும் பேராசிரியர் நீலிகா மாளவிகே போன்ற தொழில் வல் லுநர்களை உள்ளடக்கிய கொரோனா கட்டுப்பாட்டு நிபுணர் குழுவால் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

கொரோனா பரவல், புதிய கொரோனா நோயாளிகள் மற்றும் தற்போது கொரோனா காரணமாக பதிவான இறப்புகளின் எண் ணிக்கையை கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது என அமைச்சர் கூறினார்.

ஏப்ரல் 3 ஆம் திகதி இந்த முடிவு எடுக்கப் பட்டதாகவும் புத்தாண்டுக்குப் பின்னர் முடிவை செயற்படுத்த அறிவுறுத்தியதாகவும் தெரிவித்த அவர், எனவே, தான் அமைச் சராகப் பொறுப்பேற்ற ஏப்ரல் 19ஆம் திகதி அது தொடர்பில் அறிவித்தேன் எனவும் குறிப் பிட்டார்.

தான்தான் இந்த முடிவை எடுத்தேன் என்று சிலர் நினைத்தார்கள் என்றும் இது அரசியல் முடிவு அல்ல என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

முகக்கவசம் அணிவதைத் தளர்த்தும் முடிவு சமூக ஊடகங்களிலும் சிலராலும் கேள்விக்குட்படுத்தப்பட்டதாகவும் அதன் விளைவாக அந்த முடிவை மீள்பரிசீலனை செய்து முடிவைத் தெரிவிக்குமாறு சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்திய தாகவும் அமைச்சர் கூறினார்.

மேலும் மக்கள் விரும்பினால் இன்னும் முகக்கவசத்தை அணியலாம் என்றும் அவர் கூறினார்.

ஆயினும் முகக்கவசம் அணிவது மீண் டும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று அறிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

## அட்டனில் 100அடி மரத்தில் ஏறி நபர் ஒருவர் எதிர்ப்பு போராட்டம்

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (வியாழக்கிழமை) ஹற்றன் டிக்கோயா இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தில் 100அடி மரத்தில் ஏறி நபர் ஒருவர் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும், தொடர் விலையேற்றத்தைக் கண்டித்தும், காலி முகத்திடலில் தொடர் போராட்டத் துக்கு ஆதரவு தெரிவித்தும், கேகாலை ரம்புக்கனை பகுதியில் தூப்பாக்கிசூட் டில் உயிரிழந்த நபருக்கு நீதி வேண் டும் எனக் கோரியுமே குறித்த நபர் இவ் வாறு போராட்டத்தை ஆரம்பித்துள் ளார்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா இன்ஜஸ்ட்ரி கீழ்ப் பிரிவு தோட் டத்தில் 45 வயதுடைய பழனியாண்டி முருகேஸ் என்ற நபரே இவ்வாறு நூறு அடி உயரம் கொண்ட மரத்தின் மீது எறி இலங்கை தேசியக் கொடியைப் பிடித்த வாறு, எதிர்ப்பு பதாதைகளை மரத்தில் காட்சிப்படுத்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

## உடற்கல்வியியலில் விஞ்ஞானமானி சிறப்புபட்ட கற்கை நெறி யாழ். பல்கலையில் ஆரம்பம்!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்படும் உடற் கல்வியியல் விஞ்ஞானமானி சிறப்புக் கற்கை நெறிக்கு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும், விளையாட்டுத் துறை சார் திறமையின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப் படுத்தல் நிகழ்வு புதன்கிழமை இடம்பெற் றது.

யாழ்.பல்கலைக் கழக இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் விளையாட்டு விஞ்ஞானத் துறைத் தலை வர் கலாநிதி சி. சபா ஆனந்த தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணை வேந் தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தரும், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப் பினருமான சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், முன்னாள் துணைவேந் தரும், வாழ்நாள் பேராசிரியருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை, இணைந்த சுகா தார விஞ்ஞானங்கள் பீடாதிபதி தெய்வி தபோதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இவர்களுடன், பல்கலைக்கழகத்தின் பதிவாளர், நிதியாளர், நூலகர், மாணவர் நலச்சேவைகள் பணிப்பாளர், மாணவர் நலச்சேவைகள் உதவிப்பதிவாளர் உட் பட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டு புது முக மாணவர்களுக்கு பல்கலைக்கழக நடைமுறைகள் மற்றும் மாணவர் செயற் பாடுகள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

இந்த நிகழ்வில் பீடாதிபதிகள், முன் னாள் விளையாட்டு விஞ்ஞானத் துறை இணைப்பாளர்கள், உடற்கல்வி அலகின் பணிப்பாளர் மற்றும் பயிற்றுநர்கள், விரிவுரையாளர்கள், முன்னாள் மாவட்ட விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டு விஞ்ஞானத் துறையின் உயர் டிப்ளோமா மாணவர்கள் மற்றும் பழைய மாணவர் கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் 18 வயது சிறுவன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கண்டனம்

ரம்புக்கனையில் பொலிஸாரின் மிருகத்தனமான தாக்குதலை வன்மை யாகக் கண்டிப்பதாகவும், சுயாதீனமா னதும் பக்கச்சார்பற்றதுமான விசார ணையை உடனடியாக மேற்கொள்ளு மாறும் அரசாங்க மருத்துவ அதிகாரி கள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத் தியுள்ளது.

18 வயதுடைய சிறுவன் வயிற்று குழியில் காயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என அந்த சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங் களுக்குத் தெரிவித்துள்ள அவர் –

உயிருள்ள வெடிமருந்துகளால் காயங்களுடன் 15 பேர் கேகாலை வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் மூன்று நோயாளிகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையைப் பெற்று வரு கின்றனர் எனவும் அவர் தெரிவித் தார்.

கேகாலை வைத்தியசாலையில் உள்ள அவர்களது கிளை அலுவலகம் அந்த நோயாளிகளின் மார்பு துவாரம் மற்றும் வயிற்றுத் துவாரத்தில் துப் பாக்கிச் சூட்டுக் காயங்களால் காயம டைந்துள்ளனர் எனத் தமக்கு அறி வித்ததாக அவர் கூறினார்.

37 வயதுடைய ஒருவர் வயிற்றுப் பகுதியில் காயங்களுடன் ஐசியுவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் 40 வயது டைய ஒருவர் மார்புப் பகுதி மற்றும் வயிற்றுப் பகுதியில் காயங்களுடன் ஐசியுவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் 18 வயதுடைய சிறுவன் அவரது வயிற்று குழியில் காயங்களுடன் ஐசியு வில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

காயமடைந்த மேலும் 15 நோயாளி கள் மேலதிக சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

மேலும் போராட்டத்தின் போது 13 நோயாளர்கள் ரம்புக்கனை வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் பின்னர் அவர்களில் 6 பேர் கேகாலை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டதுடன், மேலும் ஏழு பேர் மருத்துவ கண்காணிப்புக்குப் பின்னர் வீடுக ளுக்கு சென்றுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

University of Jaffna
Notice for Students

All the academic activities for the students of the University of Jaffna will resume on 25.04.2022 (Monday). Please visit the University/ Faculty website (www.jfn.ac.lk) for further details.

Registrar
21.04.2022

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆய்ந்து முடிவு செய்க!

நாடு ஒரு தீர்க்கமான காலகட்டத்துக்குள் இறங்குகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பும் மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றது.

ஆனால், நாட்டின் அடுத்த கட்ட செல்நெறியை அந்தப் போராட்டம் மட்டும் தீர்மானித்து விடப்போவதில்லை. தற்போதைய நாடாளுமன்றத்தில் கட்சிகள் மற்றும் அணிகளின் அட்சரகணித எண்ணிக்கையும் அதில் பிரதான பங்கு வகிக்கப் போகின்றது.

ஆளும் தரப்பிலிருந்து அதிருப்திக் குழுக்கள் தனித்தனியாகப் பிரிந்து வெளியே வந்துள்ளன. அதனால் நாடாளுமன்றப் பெரும்பான்மை எந்தப் பக்கம் என்ற கணக்கு ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

அரசுத் தரப்புக்குள் இன்னொரு முக்கிய மாற்றம், மாற்றமல்ல வெடிப்பு அல்லது பிளவு, ஏற்படுவதற்கான சாத்தியங்கள் பெருகி வருகின்றன. அது – எஞ்சியிருக்கும் ஆளும் தரப்புக்குள் ஏற்படக்கூடிய பிளவு. அதில் ராஜபக்ஷ தரப்புகள் கூட கன்னை கட்டி, அணி சேர்ந்து, பிரிந்து நிற்கலாம்.

அதுதான் இப்போதைய நாடாளுமன்ற அரசியல் சமர்க்களத்தில் முக்கிய திருப்புமுனையாக இருக்கும்.

அந்தச் சமயத்தில்தான் தமிழர்கள் மிகப் புத்திசாலித்தனமாகவும் தீர்க்கதரிசன சிந்தையுடனும் செயற்படவேண்டும்.

ஆட்சித் தரப்புக்கு எதிராக அண்மைக் காலத்தில் கிளர்ந்தெழுந்த அணிகளில் முக்கியமானது – பிரதானமானது – விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ குழுதான்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அமைச்சர் பதவியில் இருந்து துரத்தப்பட்ட போது அவரை (கோட்டாபய ராஜபக்ஷவை) ஜனாதிபதிப் பதவியில் இருந்து அகற்றுவோம், அவருக்கு முன்னால் இனி அமைச்சர் பதவியை ஏற்க மாட்டோம் என்று சூளுரைத்து வெளியே வந்தவர் விமல் வீரவன்ஸ. ஆனால் இது விடயத்தில் இப்போது அவரது சுருதி பெரிதும் மாறிவிட்டது; தலைகீழாகி விட்டமை நோக்கற்பாலது.

இதே ஜனாதிபதியின் கீழ் இடைக்கால அரசு அமைத்து, அதில் அமைச்சர் பதவி ஏற்பது குறித்து அவர் இப்போதெல்லாம் அதிகம் பேசுகிறார்.

முழு நாடுமே 'கோட்டா கோ ஹோம்' என்றுதான் குரல் எழுப்புகின்றது. ஆனால் விமல் வீரவன்ஸ தரப்பு மட்டும் அக்கோரிக்கையை அடக்கி வாசிக்கின்றது. மாறாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு அவர்கள் – விமல் வீரவன்ஸ அணியினர் – வலியுறுத்துகின்றனர். ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவது சாத்தியமான காரியம் அல்ல என்பதால், பிரதமரைப் பதவி விலக்கி இடைக்கால அரசு அமைக்கப் போகின்றோம் என்று விளக்கம், வியாக்கியானம் வேறு கூறுகின்றார்கள்.

கோட்டாவை வீட்டுக்கு அனுப்புவோம், அவருக்கு முன்னால் இனி ஒரு தடவை அமைச்சர் பதவி ஏற்கோம் என்ற பேரினவாதிகள், இப்போது கோட்டாவைச் சமாளித்துக் கொண்டு – சகித்துக் கொண்டு – மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பும் சதிக்குத் துணை போகின்றார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் ஆட்சி பீடம் – அரியணை – ஏறுவதற்குப் பிரதான காரணகர்த்தாக்கள் இந்த விமல் வீரவன்ஸ போன்ற பேரினவாதிகள்தான்.

இப்போது, அவர்கள் அரசை விட்டு வெளியேறிய சமயம், மீண்டும் அவர்களின் கழுத்தை இறுகப் பற்றிய – அவர்களுக்கு எதிரான – வழக்குகள் எல்லாம் இப்போது திரும்பவும் பழையபடி கிடப்பில் போடப்பட்டமையில் நிச்சயமாகப் பின்புலக் காரணங்கள் இருக்கும்.

இந்தச் சமயத்தில் அரசை வீழ்த்தும் நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற நாடாளுமன்றக் கதிரைகளின் அட்சர கணித விளையாட்டில் மிகவும் புத்தி சாதுரியமாகத் தமிழர்கள் நடந்துகொள்ள வேண்டும். நாட்டையும் தமிழ் மக்களையும் சட்டியிலிருந்து அடுப்பில் வீழ்த்தும் நிலைக்குத் துணை போய்விடக்கூடாது.

பேரினவாதப் பெருஞ்சுவரில் சிறிய வெடிப்புத் தெரிகின்றது. விரிசல் தோற்றுகின்றது. ராஜபக்ஷக்கள் குடும்பத்துக்குள் இருக்கும் உள் முரண்பாடு வெளியே தலை காட்டுகின்றது. அதை உக்கிரமடைய வைத்தால் பேரினவாதப் பெருஞ்சுவரும் பிளவுபடும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் பின்னர், அடுத்தது என்ன என்பதை உறுதிப்படுத்தாமல் இந்த விடயத்தில் தீர்க்கமான – தீர்மானகரமான – எண்ணிக்கையில் அமையக்கூடிய தமிழர்கள் தவறாகச் சோரம் போய்விடக்கூடாது.

# சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறுவதிலும் நெருக்கடி நிலைமை

சர்வதேச நாணய நிதியத்தின் சாத்தியமான கடன் திட்டம் தொடர்பாக இலங்கையுடனான கலந்துரையாடல்கள் ஆரம்பக் கட்டத்தில் இருக்கின்றன எனவும், எந்தவோர் ஒப்பந்தத்துக்கும் நாட்டின் கடன்களை நிலையான பாதையில் கொண்டு செல்ல முடியும் என்பதற்கான 'போதுமான உத்தரவாதங்கள்' தேவைப்படும் என்றும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, கடன் வழங்குதல் மற்றும் கொள்கைத் திட்டங்கள் குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தூதரகத்தின் தலைவர் மசாஹிரோ நோசாகி சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அனுப்பிய மின்னஞ்சலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கடுமையான கொடுப்பனவுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், பொருளாதாரத்தை மீளவும் கூடிய விரைவில் நிலையான வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் கூடிய வேலைத்திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும் என்று நோக்கி தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களுக்கான எதிர்ப்புக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியவையாக மாறியமையை அடுத்து, இலங்கையின் நிதியமைச்சர், அவசரகால நிலுவைத்தொகை ஆதரவு தேவைப்படும் நாடுகளுக்கு விரைவான நிதியளிப்புக் கருவிக் கடனை முறையாகக் கேட்டதை அடுத்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

'இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள், குறிப்பாக ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் மிகவும் அக்கறை கொண்டுள்ளது' எனவும் நோசாக்கி தெரிவித்துள்ளார்.

ஆனால், ஐ.எம்.எவ். ஊழியர்கள் கடந்த மாதம் இலங்கையின் பொதுக் கடன் தாங்க முடியாது என வருடாந்த பொருளாதார மதிப்பாய்வில் தீர்மானித்துள்ளனர் எனவும், அவசர கால விரைவான நிதியளிப்பு கருவி உட்பட எந்தவொரு கடன் வழங்குவதற்கு முன்னர் நாடு கடனை நிலைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு பொதுவாக பொதுக் கடன்களின் மறுசீரமைப்பு தேவைப்படுகிறது, இதற்கு இலங்கையின் விடயத்தில் அதன் மிகப்பெரிய இருதரப்பு கடன்வழங்குநர்களில் ஒன்றான சீனாவின் ஒத்துழைப்பு தேவைப்படும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'இந்த பரிசீலனைகள் இலங்கைக்கான சாத்தியமானதாக ஆராயப்பட வேண்டும், கடன் நிலைத்தன்மை தீர்க்கப்படும் என்று போதுமான உத்தரவாதம் கிடைத்தமையுடன், திட்ட இலக்குகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட இலங்கை ஐ.எம்.எவ். கடனுக்கான குறிப்பிட்ட வடிவமைப்பு அரசாங்கத்திற்கும் ஐ.எம்.எவ் ஊழியர்களுக்கும் இடையிலான விரிவான கலந்துரையாடல்களின் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 'இது தொடர்பிலான விவாதங்கள் இன்னும் ஆரம்ப கட்டத்தில் உள்ளன' எனவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை பிரதிநிதிகளுடன் சாதகமான சந்திப்பு உலக வங்கியின் துணைத் தலைவர் தெரிவிப்பு



நிதியமைச்சர் அலி சப்ரி மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் என். வீரசிங்க ஆகியோருடன் ஒரு நல்ல கலந்துரையாடலை அமைந்ததாக தெற்காசியாவுக்கான உலக வங்கியின் துணைத் தலைவர் ஹார்ட்விங் ஷாஃபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பதிவொன்றிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள், ஸ்திரப்படுத்தல் மற்றும் மீட்புக்கு ஆதரவு வழங்குதல் மற்றும் இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பது தொடர்பில் இதன் போது விவாதிக்கப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாயண நிதியத்துடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக நிதியமைச்சர் அலி சப்றி தலைமையிலான குழுவில் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் அடங்குகின்றனர்.

அமெரிக்காவின் – வாஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்ப கட்ட பேச்சுகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானமையுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு இலங்கைக்கு 50 கோடி அமெ.டொலர்!

**வழங்குகின்றது இந்தியா**

இலங்கைக்கு எரிபொருள் கொள்வனவு செய்வதற்கு மேலும் 50 கோடி அமெரிக்க டொலர்களை நிதி உதவியாக வழங்க இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், பங்களாதேஷுக்கு செலுத்த வேண்டிய 45 கோடி டொலர் கொடுப்பனவை ஒத்திவைப்பதற்கு பங்களாதேஷ் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளி விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார் என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

# நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு கிடையாது விநியோகக் கட்டமைப்பில்தான் பாதிப்பாம்!

## இப்படி விளக்குகிறார் பொறுப்பான அமைச்சர் காஞ்சன விஜயசேகர

நாட்டில் எரிபொருள் மற்றும் மின்சார விநியோக கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்டு மக்களின் அத்தியாவசிய சேவை பாதிக்கப்பட்டால் அதன் பொறுப்பை எதிர்க்கட்சியினர் முழுமையாக ஏற்க வேண்டும்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு கிடையாது. எரிபொருள் விநியோகக் கட்டமைப்பில் தான் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

ரம்புக்கனைச் சம்பவம் தொடர்பில் சபையில் விசேட உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ரம்புக்கனைச் சம்பவம் தொடர்பில் அரசாங்கம் என்ற ரீதியில் கவலையடைவதுடன், சம்பவத்தில் உயிரிழந்த இளைஞரின் இழப்பிற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

ரம்புக்கனைச் சம்பவம் தொடர்பில் பல்வேறு மாறுப்பட்ட பல விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. உண்மை காரணிகள் திட்டமிட்ட வகையில் மறைக்கப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

முத்துராஜவெல எண்ணெய் களஞ்சியசாலையில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை காலை 08.20 மணியளவில் எரிபொருள் நிரப்பப்பட்ட பவுஸர் ரம்புக்கனை உட்பட மூன்று பகுதிகளுக்குச் சென்றுள்ளது.

குறித்த பவுஸர் காலை 11.20 மணியளவில் ரம்புக்கனை எரிபொருள் நிரப்பு நிலையத்தை அடைந்தமையைத் தொடர்ந்தே பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது.

ஆகவே கடந்த திங்கட்கிழமை பவுஸர் புறப்பட்டு அது ஒரு நாள் முழுவதும் பிறிதொரு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் குறிப்பிடும் செய்தி அடிப்படையற்றதாகும்.

ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபடும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. அத்தியாவசிய சேவைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் போராட்டத்தில் ஈடுபட இடமளிக்க முடியாது. 3 முனையங்களில் இருந்து 537 பவுஸர்கள் ஊடாக நாடு தழுவிய ரீதியில் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது.

தற்போதைய அமைதியற்ற சூழ்நிலையால் தற்போது நாடு தழுவிய மட்டத்தில் 46 பவுஸர்களின் ஊடாக மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது.

வைத்தியசாலை மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ரம்புக்கனைப் போராட்டம் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. சுயாதீனமான முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு கிடையாது. 10 நாள்களுக்குத் தேவையான பெற்றோல் மற்றும் டீசல் கையிருப்பில் உள்ளது. எரிபொருள் விநியோக கட்டமைப்பில்



மாத்திரம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அமைதியற்ற சூழ்நிலையால் சாரதிகள் சேவைக்கு சமுகமளிப்பதில் அச்சம் கொண்டுள்ளார்கள்.

நாட்டில் எரிபொருள் மற்றும் மின்சாரத்துறை சேவை கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்டு முழு அத்தியாவசிய சேவையும் பாதிக்கப்பட்டால் அதற்கு எதிர்க்கட்சியினர் மாத்திரம் பொறுப்புக் கூற வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை சீர் செய்ய அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார்.

# தமிழர் பகுதிகளில் புலனாய்வாளர்கள் பெருமளவில் களமிறக்கப்பட்டுள்ளனர்



சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தின் கருவிகளாகத் தான் புலனாய்வு பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர் கையாளப்படுகின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

ஊடக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நாங்கள் ஒரு சிறு ஆர்ப்பாட்டத்தையோ அல்லது எதிர்ப்பினையோ காட்டுவதற்கு முற்படுகின்ற போது அங்கு வந்திருக்கும் புலனாய்வுப் பிரிவினரை எண்ணிப்பார்க்கும் போது அளவிற்கு அதிகமானோர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள்.

உண்மையில் இந்த நாட்டில் இவ்வளவு தூரம்பொருளாதாரநெருக்கடிஏற்படுவதற்குக் காரணம் என்னவென்றால் இந்தப் பாதுகாப்பு பிரிவினருக்கு அவர்கள் செலவு செய்கின்ற அந்தப் பணத்தொகை என்பது அபாரமாகக் காணப்படுகிறது.

இதேவேளை இலங்கை அரச கட்டமைப்பிலுள்ள அத்தனை புலனாய்வாளர்களும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தற்போது களமிறக்கப்பட்டுள்ளார்கள் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், அது உண்மையான விடயம்.

ஏனென்றால் இன ஒடுக்குமுறை. போராட்ட சூழ்நிலை வடக்கு, கிழக்கில் தான் கடந்த காலங்களில் காணப்பட்டது அல்லது அடிபணியாத குணாம்சம் காணப்பட்டது.

எங்கள் நிலத்தில் நாங்கள் கௌரவமாக, மரியாதையாக வாழ வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட்டதன் காரணமாக, சுயநிர்ணயம் மற்றும் சுயகௌரவம் என்ற வகையில் செயற்பட்டதன் காரணமாக இவர்களை எப்படியாவது அடக்கி ஒடுக்கி அவர்களின் முனைப்பானச் செயற்பாடுகளை ஓர் அடிமைத் துவ நிலைக்கு மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு தான் அவர்கள் செயற்படுகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

# மஹிந்தவால் கோட்டாவுக்கு வழங்கப்பட்ட புத்தகத்தின்படியே ரம்புக்கனை கொலை!

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

30 ஆண்டுளாக அரச பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியிருந்த தமிழர்கள் பட்ட வேதனைகளை சிங்கள சகோதரர்கள் அனுபவிக்கக் கூடாது என்பதை தாம் விரும்புகிறோம் எனத் தமிழ்த் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்போது அவருடைய சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சட்டப்புத்தகம் ஒன்று வழங்கப்பட்டது.

மனிதாபிமான சட்டப்புத்தகமே அதுவாகும். அந்தச் சட்டப்புத்தகத்தை பயன்படுத்தியே கோட்டாபய ராஜபக்ஷ இனவழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்.

இந்தப் புத்தகம் இன்றும் அவரால் வழிநடத்தப்பட்ட படையினர் மற்



றும் பொலிஸ் உறுப்பினர்களிடம் இருக்கின்றது கஜேந்திரன் குறிப்பிட்டார்.

இந்தநிலையில் குறித்த புத்தகத்தை பயன்படுத்தியே ரம்புக்கனையிலும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த சட்டப்புத்தகத்தில் தங்களை எதிர்ப்போரை கண்மூடித்தனமாக கொலை செய்து கற்பழித்து, பெக்கோவை கொண்டு அவர்களைப் புதைத்து விடுமாறு கூறப்பட்டுள்ளது என கஜேந்திரன் குறிப்பிட்டார்.

# இலங்கையை இந்திய மாநிலமாக மாற்றும் டுவிட்டர் செய்தியில் உண்மை ஏதுமில்லை

## தெளிவுபடுத்துகின்றது இந்தியத் தூதரகம்

இலங்கை மக்கள் விரும்பினால், இலங்கை தனது ஒரு மாநிலம் என அறிவிக்க இந்தியா தயார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார் என வெளியாகியுள்ள டுவிட்டர் செய்தி உண்மைக்கு புறம்பானது என இந்தியா தெரிவித்துள்ளமையுடன், அதனைக் கடுமையாகச் சாடியுள்ளது.

இலங்கை மக்கள் இணங்கினால் இலங்கையை இந்தியா தனது இன்னுமொரு மாநிலமாக அறிவிக்க தயார் – அதற்கு பதிலாக இந்தியா இலங்கையில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு உட்பட ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் நீண்ட கால விடயங்களுக்கும் உதவலாம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார் எனக் குறிப்பிடும் டுவிட்டர் செய்தியொன்று வைரலாகி வருகின்றது.

இந்த நிலையில், குறித்த டுவிட்டர் செய்தி போலியானது என தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் வைத்தியர் எஸ்.ஜெய்சங்கரின் டுவிட்டர் கணக்கிற்குரியதென காண்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட போலியான படம் தொடர்பாகத் தாம் அறிந்துள்ளோம் எனவும் இது முழுக்க முழுக்கப் போலியானதும் புனையப்பட்டதுமாகும் என்றும் அந்த பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீய எண்ணத்துடனான இதன் உள்ளீடுகளை தாம் கடுமையாக மறுக்கின்றோம் என்றும் இந்தியா – இலங்கை இடையில் காணப்படும் நட்பு ரீதியானதும் நெருக்கமானதும் தொன்மையானதுமான உறவை பாதிக்கும் வகையில் அவநம்பிக்கை கொண்ட தரப்பினரால் மேற்கொள்ளப்படும் தீய நோக்கத்துடனான இம்முயற்சிகள் ஒருபோதும் வெற்றியடையப்போவதில்லை எனவும் அந்தப் பதிவில் இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

# அரசியல் கட்சிகள் அனைத்தும் இணைந்து செயற்படவேண்டும்!

## அகிலவிராஜ் காரியவசம் கோரிக்கை



அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் நாட்டின் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண அனைவரும் அரசியல் பேதங்களை தவிர்த்து இணைந்து செயற்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வைத்து அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு -

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமானது.

பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அனைத்து அரசியல் கட்சிகளும் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்படுவது இன்றியமையாதது என வலியுறுத்தியுள்ளார்.

# நிதி இல்லாத இராஜாங்க அமைச்சுகளை வைத்திருந்து எதைச் செய்ய முடியும்?



## இரா.துரைரெட்ணம் கேள்வி

பொருள் கொள்வனவிற்கே நாட்டில் நிதி இல்லாத நிலையில் அதிகாரமற்ற இராஜாங்க அமைச்சுகளை வைத்து என்ன செய்ய முடியும் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா மன்ற அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

அண்மையில் வழங்கப்பட்ட புதிய அமைச்சரவை விடயத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, அரசாங்கத்துக்குச் சார்பாகச் செயற்பட்ட இரண்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் குறைந்த, இராஜாங்க அமைச்சர் பதவியும், இந்த அரசாங்கத்தின் கொள்கையை எதிர்த்து இந்த அரசாங்கத்தை விமர்சித்து வந்த முஸ்லீம் காங்கிரஸ் நாடாளுமன்றம் உறுப்பினருக்கு அமைச்சரவைஅந்தஸ்த்துள்ள அமைச்சர் பதவியும் வழங்கி இந்த அரசாங்கம் இன்னும் இன்னும் தமிழர்களைக் கேலியாக்கியுள்ளது.

இவ்வாறாக அரசாங்கம் செயற்படுகையில் அதிகாரம் குறைந்த இராஜாங்க அமைச்சுப்பதவிகளைப்பெற்று இவர்கள் ஏன் அரசுக்கு முட்டுக் கொடுக்க வேண்டும் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது.

வடக்கைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தில் அரசுக்குச் சார்பாகச் செயற்பட்டதமிழ்நாடாளுமன்றஉறுப்பினருக்கு அதிகாரமுள்ள அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளார்கள்.

ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மற்றும் சந்திரகாந்தன் ஆகியோர் இந்த அரசுக்குச் சார்பாகவே செயற்பட்டு வருகின்றனர். அரசின் கொள்கையை ஏற்றுக் கொண்டு நடைமுறைப் படுத்துவதில் இவர்கள் சார்ந்து நியாயப்பாடுகள் இருக்கலாம்.

ஆனால் தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் இவ்வாறான பிரச்சினைகளின் போது குறிப்பாக சமூக நலன்தொடர்பாகஎந்தவிததூரநோக்கும் இல்லாமல் எரிபொருள், எரிவாயு, பொருள்களின் விலையேற்றம் போன்ற விடயத்தில் இந்த அரசாங்கமும், ஆளுந்தரப்பு பிரதிநிதிகளும் எவ்வித கரிசனையும் காட்டவில்லை.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற அரசு சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு மக்கள் அவதியுறும் இந்த நிலையில், பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கே நாட்டில் பணமில்லாத இந்த நிலையில் அதிகாரம் குறைந்த இந்த இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற வேண்டுமா? இந்த நாட்டில் தற்போதைய நிலையில் அபிவிருத்திக்கென எந்த நிதியுமே இல்லை என்பது உலகத்துக்கே தெரியும்.

இவ்வாறு பிரயோசனமற்ற நிலையில் இவ்வாறான அமைச்சுகளை வைத்து என்ன செய்யப் போகின்றார்கள். இவர்கள் இதனைப் பொறுப்பெடுக்க வேண்டுமா? எனவே இந்தத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் இந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதா இல்லையா என அவர்கள் பரிசீலிக்க வேண்டும். அத்துடன் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் நாடு பூராகவும் மூவின மக்களும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை செயற்படுத்தி வருகின்ற வேளையில் நேற்றைய தினம் ரம்புகனையில் இடம்பெற்ற போராட்டத்தில் நிகழ்த்தப்பட்ட சம்பவத்தின் மூலம் ஒருவர் கொல்லப்பட்டதும் பலர் காயமுற்றிருப்பதுமான விடயம் இந்தக் கொடுங்கோல் அரசாங்கம் ஜனநாயகத்திற்கு அடித்த சாவு மணியாகவே அமைகின்றது.

எனவே அந்தப் போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டினை நடத்துவதற்கு உத்தரவிட்ட அதிகாரியும், துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களுக்கும் எதிராக இந்தப் புதிய அமைச்சரவை சட்ட நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்விகளும் உள்ளன.

இவ்வாறான இந்தக் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும். கொடுங்கோலாட்சிக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு, அதிகாரங்களை நாடாளுமன்றத்துக்கு வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீள நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்று தெரிவித்தார்.

# போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் அமைச்சர்கள் மூவரின் உத்தரவுக்கமையவேயாம்!

## நளின் பண்டார குற்றச்சாட்டு

கேகாலை, அம்பாந்தோட்டை மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள அமைச்சர்களே போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளுமாறு பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு உத்தரவிட்டனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று(வியாழக்கிழமை) உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

ரம்புக்கனையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக நடவடிக்கையில் 3 ஆயுதங்களின் ஊடாக 90 ரவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

போராட்டத்துக்கு முந்தைய நாள் இடம்பெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தலைமையிலான கூட்டத்தின் போது போராட்டத்தில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய வேண்டாம் என்றே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அப்படியிருக்க போராட்டத்தின் போது எவ்வாறு துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. போராட்டத்தின் போது துப்பாக்கி சூடு நடத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கீர்த்திரத்ன என்பவரே உத்தரவிட்டுள்ளார்.

அவருக்கு அந்த உத்தரவை வழங்குமாறு கோரியது பொலிஸ்மா அதிபரோ அல்லது சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களோ அல்லர். ஆளுங்கட்சியில் உள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் மூவரே கூறியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டை நான் பொறுப்புடனேயே தெரிவிக்கின்றேன். கேகாலை, அம்பாந்தோட்டை மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள அமைச்சர்களே இவ்வாறு போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளுமாறு பொலிஸ் அத்தியட்சகர்க ளுக்கு உத்தரவிட்டுள் ளனர். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம்; நீதிமன்றில் திரண்ட சட்டத்தரணிகள்

ரம்புக்கனையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவாக கேகாலை நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் திரண்டனர். ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக நீதிமன்றில் முன்னிலையாவோம் என சாலிய பீரிஸ் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு காலிமுகத்திடல் போராட்டத்தில் இலங்கை கிரிக்கட் ஜாம்பவானின் மனைவி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி, கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் இளைஞர்கள் மற்றும் பலர் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் போராட்டக்காரர்கள் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றமையுடன், தற்போதும் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக பெருந்திரளானவர்கள் திரண்டு அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். குறித்த போராட்டத்துக்கு இலங்கையின் முக்கியஸ்தர்கள் பலரும் தங்களது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், இலங்கையின் கிரிக்கெட் ஜாம்பவான் குமார சங்கக்காரவின் மனைவி காலிமுகத்திடல்போராட்டக்களத்துக்குச் சென்று தமது ஆதவைத் தெரிவித்துள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் நினைவு நிகழ்வு மட்டக்களப்பில் மக்கள் அஞ்சலிகள்

மட்டக்களப்பு சீயோன் தேவலாயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவு நினைவேந்தல் சீயோன் தேவாலயத்திலும் காந்திபூங்கா மற்றும் கல்லடி பாலத்துக்கருகிலுள்ள நினைவு தூபிகளில் நேற்று (வியாழக்கிழமை) காலை 9.05 மணிக்கு இடம்பெற்ற நினைவேந்தல்களில் உயிரிழந்தவர்களின் உறவுகள் உட்பட பொதுமக்கள் கலந்து கொண்டு மலர் தூவி சுடர் ஏற்றி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாதிகளால் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட தற்கொலை குண்டு தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்தமையுடன் 93 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தற்கொலை குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 3ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு குண்டுவெடிப்பு இடம்பெற்ற சீயோன் தேவாலாயத்தில் போதகர் ரொசான் மகேசன் தலைமையில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி இடம்பெற்ற விசேட ஆராதனையில் உயிரிழந்தவர்களின் உறவுகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு ஆராதனையில் ஈடுபட்டு அஞ்சலி செலுத்தினர். அதேவேளை மட்டு காந்தி பூங்காவில் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவு தூபியில் மட்டு மாநகரசபை முதல்வர் ரி.சரவணபவான் தலைமையில் மாநகரசபை உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் கலந்து கொண்டு தூபியில் மலர் தூவி சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து மட்டு கல்லடி பாலத்துக்கு அருகில் தேவாலய குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் உறவுகளால் அமைக்கப்பட்ட தூபியில் பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் உயிரிழந்தவர்களின் உறவுகள் மலர் வைலையம் வைத்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியமையுடன் உயிரிழந்தவர்களுக்கு நீதி வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஏப்ரல் 25 ஆம் திகதி வரை எரிவாயு விநியோகம் இல்லை!

## லிற்றோ நிறுவனம் அறிவிப்பு

உள்நாட்டு பற்றாக்குறையால் எரிவாயு சிலிண்டர்களை ஏப்ரல் 25 ஆம் திகதி வரை சந்தைக்கு விநியோகிக்க முடியாது என லிற்றோ நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எரிவாயு சரக்கு கப்பல்கள் இன்னும் கரைக்கு வந்தடையாதமையால், விநியோக வலையமைப்பை சீராக்க வேண்டிய நெருக்கடியான சூழ்நிலையில் நிறுவனம் உள்ளதாக அவர் குறிப்பிட்டார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தங்களுக்கு எரிவாயு விநியோகச் சங்கிலியில் சிக்கல் உள்ளதாகவும் இருப்பினும் நாட்டில் தற்போது நிலவும் எரிவாயு பற்றாக்குறை ஓரிரு மாதங்களுக்குள் இயல்பு நிலைக்குத் திரும்பும் என்றும் அந்த அதிகாரி கூறினார். முன்னதாக, ஏப்ரல் 12 முதல் வணிக நோக்கங்களுக்காக எரிவாயு விநியோகம் இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கைத்துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் இளைஞரொருவர் கொழும்பு – முகத்துவாரம், புளுமெண்டல் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

புளுமெண்டல் – மாதம்பிட்டி வீதிக்கு அருகில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முகத்துவாரம் பகுதியை சேர்ந்த 25 வயதான இளைஞரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலும் குறித்த நபர் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவொன்றைச் சேர்ந்தவரென விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நேற்று (வியாழக்கிழமை) அளுத்கடை நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதுடன் அவரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

புளுமெண்டல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பொதுப் பரீட்சைகள்; திகதிகள் அறிவிப்பு




ஏற்கனவே திட்டமிட்டபடி மே மாதம் 23ஆம் திகதி முதல் ஜுன் முதலாம் திகதி வரை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் இடம்பெறும் என கல்வி அமைச்சர் ரமேஷ் பத்திரன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதி முதல் நவம்பர் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது எனவும் –

இவ்வாண்டுக்கான தரம் 5 இற்கான புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 16ஆம் திகதி இடம் பெறும் எனவும் – கல்வி அமைச்சர் ரமேஷ் பத்திரன மேலும் தெரிவித்துள்ளார்.

---

## இந்திய உதவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கரையை அடைந்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ள எரிசக்தி மற்றும் மின்வலு அமைச்சர் காஞ்சன விஜயசேகர நாடளாவிய ரீதியில் எரிபொருளைத் துரிதமாக விநியோகிப்பது தடையின்றி நடக்கக்கூடிய வகையில் ஒழுங்குகளைப் பேணுமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## உயிர்த்த ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றம் சபா நாயகர் மஹிந்த

யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கைகள் இடம்பெற்றமையைத் தொடர்ந்து, ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி கோரிக்கை ஒன்றை முன்வைத்து கருத்து கெளியிட்டார்.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இன்று மூன்று வருடங்கள் ஆகின்றன. என்றாலும் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை. அவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் குண்டுத் தாக்குதலில் மரணித்தவர்களுக்காக இந்த சபையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும்" – என்று கேட்டுக்கொண்டார்.

இதன்போது சபாநாயகர், நிலையியற் கட்டளையின் பிரகாரம் அவ்வாறு செய்ய முடியாது என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ –

"மரணித்தவர்களுக்கு சபையில் மௌன அஞ்சலி செலுத்திய முன்மாதிரிகள் இருக்கின்றன. மகாநாயக்க தேரர் ஒருவரின் இறப்பை அடுத்து, விமல் வீரவன்ஸ கொண்டுவந்த பிரேரணைக்கு அமைய அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட்டது. அதேநேரம் ராமாஞ்ச நிகாய மகாநாயக்க தேரர் இறந்தபோது, அவருக்கு அஞ்சலி செலுத்தவேண்டும் என நான் பிரேரணை கொண்டுவந்தபோது அதற்கு அன்று அனுமதி கிடைக்கவில்லை.

"என்றாலும் நிலையியற் கட்டளைகளை சற்று பின் தள்ளிவிட்டு, உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலில் மரணித்த நூற்றுக்கணக்கான மக்களுக்காக ஒரு நிமிடம் அஞ்சலிசெலுத்த முடியாவிட்டால், 30 செக்கன்களாவது வழங்கவேண்டும்." – எனக் கேட்டுக்கொண்டார்.

இறுதியில் சபையில் உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலில் மரணித்தவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

---

# தனது தந்தையின் மரணத்துக்கு நீதி கோரும் ரம்புக்கனையில் சுட்டுக்கொல்லப்பட்ட நபரின் மகள்

ரம்புக்கனையில் இடம்பெற்ற போராட்டத்தின் போது பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட நபரின் மகள் நீதி கோரி கோரிக்கை விடுத்துள்ளார்.

42 வயதான கே.டி.லக்ஷான், செவ்வாய்க்கிழமை எரிபொருள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த நபரின் மகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தனது தந்தை போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும், தனது மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருளை வாங்க சென்றார் எனத் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் இருந்து விலகி நிற்கும் போது தனது தந்தை பொலிஸாரால் சுடப்பட்டதை மற்றொரு நபர் பார்த்தார் என அவர் மேலும் கூறினார். தனக்கு எந்த நிதியுதவியும் தேவையில்லை என்று கூறிய அவரின் மகள், தன் தந்தைக்கு நியாயம் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள்களின் விலைகள் அதிகரிப்பால் நெருக்கடியில் அரச உத்தியோகத்தர்கள்

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக அரச உத்தியோகத்தர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் சந்தன சூரியராச்சி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலதிக கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளாத அரச உத்தியோகத்தர்கள் இந்த நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமைக்கு விரைவான தீர்வை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மங்கள சமரவீர நினைவாக அடையாள சத்தியாக்கிரகம்



மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர நினைவாக அடையாள சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று அவரது பிறந்த தினமான நேற்று மாலையில் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நடைபெற்றது.

இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரணில் விக்கிரமசிங்க, எம்.ஏ. சுமந்திரன், மனோ கணேசன் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையான அரசியல்வாதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நேற்றும் இந்திய உதவி விநியோகம்



இந்திய அரசாங்கம் இலங்கை மக்களுக்கு நேரடியாக வழங்கிக் கொண்டிருக்கும் உதவிகளின் பகுதியாக, யாழ் இந்திய துணைத் தூது வர், சமயத் தலைவர்களுடன் இணைந்து, யாழ் மாவட்டத்திலுள்ள 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்களை நேற்று வழங்கினார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

---

## ஆளும் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமையை அரசாங்கம் வலுவாக எதிர்கொள்ள வேண்டும் எனவும், அதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற ஆளும் கட்சியின் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சஹன் பிரதீப் முன்மொழிந்தார்.

அந்த முன்மொழிவிற்கு அனைத்து உறுப்பினர்களும் கைகளை உயர்த்தி ஏகமனதாக ஆதரவளித்தமையுடன், நாடாளுமன்ற உறுப்பினர் யூ.கே.சுமித் முன்மொழிவை வழிமொழிந்தார்.

எதிர்வரும் வாரங்களில் மக்களுக்கு தேவையான துரித நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்களினால் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

ஒரு சில வாரங்களுக்குள் எரிபொருள் மற்றும் மின் தடை பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறார் என வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதன்போது சுட்டிக் காட்டினார்.

அதேபோன்று சமையல் எரிவாயு பிரச்சினையையும் ஒருசில வாரங்களுக்குள் தீர்க்க முடியும் என கல்வி மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பதிரன குறிப்பிட்டார்.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு மத்தியில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளிலிருந்து வெளியேறி பெற்றுக்கொடுத்த ஆதரவிற்கு கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் நன்றிகளைத் தெரிவித்தனர்.

அரசாங்கத்தை கவிழ்க்கும் பொய்ப் பிரசாரங்களின் மூலம் அரசாங்கம் மீதான மக்களின் நம்பிக்கையைச் சீர்குலைக்கும் வகையில் சில குழுக்கள் செயற்பட்டு வருகின்றன எனவும், கட்சி உறுப்பினர்கள் என்ற வகையில் அரசாங்கத்தை சீர்குலைக்க ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் எனவும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு நம்பிக்கை அளித்துள்ளனர்.

அரசாங்கத்தை வலுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பு எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும் எனவும் உறுப்பினர்கள் இதன்போது குறிப்பிட்டனர். – என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

---

## 3 பொலிஸ் அதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

றம்புக்கனைவல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர், சாட்சியாளர்களிடம் சுயாதீன விசாரணைகளை நடத்தவும், நீதிமன்ற விசாரணைகளில் கலந்துக் கொள்ள சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கிலும் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே றம்புக்கனை ஆர்ப்பாட்டகாரர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டும் சிலர் காயமடைந்தமை சம்பவந்தமான விசாரணைகளை பொலிஸ் மா அதிபர் குற்றவியல் விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளார்.

# வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ...?

அக்கரை அக்கறை அலசல்




என்.சத்தியமூர்த்தி

கனவு கூட காண முடியாத பொருளாதார நெருக்கடியில் நாடு சிக்கி இருக்கும் போது, அண்டையில் நட்பு நாடான இந்தியா, அனைத்து வகையிலான உதவிகளையும் வழங்கி வருகிறது. தன்னாலான உதவிக்கு அப்பால், வாஷிங்டனில் சர்வ தேச நாணய நிதியத்திடமும் இலங்கைக்கு காலதாமதமின்றி, கடனுதவி செய்ய வேண்டும் என்றும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டுள்ளார். அதாவது, திவாலாகும் நிலையில் உள்ள இலங்கை, முழுவதுமாக முழுகி விடக்கூடாது என்று இந்தியா தன் பங்கிற்கு முடிந்த வரையில் சொல்லாலும் செயலாலும் உதவி செய்து வருகிறது.

இந்தியாவின் இந்த அனுசரணை குறித்து இலங்கை அரசு அதிகாரபூர்வமான கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. ஆனால், கொழும்பை மையம் கொண்டுள்ள பிரதான எதிர்க்கட்சிகள், இந்தியாவின் உதவிகளுக்கும் முயற்சிகளுக்கும் நன்றி தெரிவித்தவண்ணம் இருக்கின்றன. ஆனால், தமிழர் தரப்புகளோ இன்னமும் வாய் மூடி மௌனியாகவே இருக்கின்றன. இது போதாது என்று, தமிழரில் ஒரு தரப்பினர், இந்தியா ஏதோ ஆளும் ராஜபக்ஷக்களுக்கு மட்டுமே இத்தகைய உதவிகளை வழங்குவதாக எண்ணி, குறை கூறி சமூக வலைதளங்களில் தங்களது அரை வேக்காட்டுத்தனமானத் கருத்துக்களைப் பதிவு செய்து, பரப்பிய வண்ணம் உள்ளனர்.

இவ்வாறு, இந்தியா மீது அவதூறு பரப்பும் பிரகஸ்பதிகளின் அடையாளம் குறித்து கவலைப்படத் தேவையில்லை. எப்போதெல்லாம் குறிப்பாக இந்தியாவை தாக்க வேண்டும் என்ற எண்ணத்தில், உப்புச் சப்பில்லாத விடயங்களை எல்லாம் ஊதி பெரிதாக ஆக்குகிறார்களோ, அப்போதே அவர்களுடைய அடையாளம் மற்றும் ஆதங்கம் தாமாகவே முன்னிறுத்திக் கொள்கின்றன. அவை குறித்து அதிக ஆராய்ச்சி தேவையில்லை.



அது போலவே, தற்போதைய சூழலில், இவ்வாறு கூறி மகிழ்பவர்கள், நிச்சயமாக, இலங்கை வாழ் தமிழர்களாக இருக்க முடியாது. தாங்கள், தங்களாதாக்கிக் கொண்ட வேறொரு நாட்டில் மிக சௌகரியமாக வாழ்ந்து வரும் புலம்பெயர்ந்தோரில் ஒரு பகுதியினரே, இவ்வாறான துஷ்பிரசாரங்களில் ஈடுபடுபவர்கள் எனலாம். அவர்கள் இந்திய அரசு ராஜபக்ஷக்களைக் காப்பாற்றவே இலங்கைக்கு நிதி உதவி செய்கிறது என்பதற்கு மாறாக, அவ்வாறான உதவி, தமிழ் மக்களையும் சென்றடைய வழி செய்ய வேண்டும் என்று கூறுவார்களேயானால், அவர்களது கவலையில் உள்ள நியாயம் வெளிப்படும்.

அது போன்றே, அவர்களில் ஒரு சிலராவது தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மாநில அரசு இலங்கை தமிழ் பகுதி மக்களுக்குக் தேவையான உணவு மற்றும் மருந்து வசதிகளை அனுப்பி வைப்பதற்கு தயாராக இருக்கிறது என்ற அறிவிப்பை வரவேற்று சமூக வலைத்தளங்களில் பரப்பி இருந்தால், அதன் நியாயம் புரியும். ஆனால், ஸ்டாலினின் தந்தையார், காலம் சென்ற மு.கருணாநிதியின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சியால், இந்தத் தரப்பினர், அவரது அறிவிப்பு குறித்து கருத்து கூற விரும்பவில்லை.

அத்தகைய காழ்ப்புணர்ச்சி, இன்றளவும், இந்தியா மீது இந்தத் தரப்பினருக்கு இருக்கிறது என்பது உண்மை. இதன் மூலம் அடுத்த தலைமுறையினரின் மனங்களில் விதையைத் தூவுவது தவிர இவர்களுக்கு கிடைக்கக் கூடிய பயன் எதுவும் இல்லை. இந்தியா என்ற நாடு, இவர்களது காழ்ப்புணர்ச்சியால், காணாமல் போய்விடப் போவதில்லை. மாறாக, இவர்களால், எண்ணவோட்டம் பாதிக்கப்பட்ட அடுத்த தலைமுறை தமிழர் தலைமைகளும் மக்களும் தங்களுக்கு கிடைக்கக் கூடிய பெறுபேறுகளை தாங்களாகவே இல்லாததாக்கிக் கொள்வார்கள்.



## யாதும் ஊரே, யாவரும் கேளிர்

எங்கோ இருந்து கொண்டு இந்தியாவை குறை கூறும் இவர்களெல்லாம், இந்தியா என்ற நாட்டையும் அதன் தனித் தன்மைகளையும் புரிந்து கொள்ளவில்லை என்பதே உண்மை. குறிப்பாக, இந்தியாவில் வாழும் தமிழ் பேசும் மக்களைத் தங்களது இனம் என்று கூறிக் கொண்டு, அவர்களையும் அவர்கள் சேர்ந்த நாட்டையும் தங்களைப் போன்றே யுக்தி படைத்த கூட்டமாகவே கருதி செயல்பட்டு வருகிறார்கள். அதனால் தான், அகதியாக இந்தியாவில் தஞ்சம் அடைந்த போதும், விடுதலைப் புலிகள் இயக்கம், எம்.ஜி.ஆர். பின்னால் நின்று, கருணாநிதியை மட்டம் தட்டி, உள்நாட்டு அரசியலில் தலையீடு செய்தது.

இன்று பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக் காலத்திற்கு முன்னரே, சுதந்திர இந்தியா, கணியன் பூங்குன்றனாரின் ‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’ என்ற பழமொழிக்கு உட்பட்டே செயல்பட்டு வந்துள்ளது. அதுவே, மோடி காலத்தில், ‘வசுதேவ குடும்பகம’ என்ற சமஸ்கிருத மொழி வடிவத்திலும் கூறப்பட்டு வருகிறது.

இந்த இரண்டின் பொருளும் ஒன்றுதான். அவற்றின் அடிப்படை கருத்தும் ஒன்றுதான். பூங்குன்றனார் கூற்றுப் படி, ’உலகம் முழுவதும் எனது நாடுதான். அது போன்றே, உலகளாவிய மக்களும் எனது உறவினரே’ என்பதே அந்த வசனத்தின் பொருள். இதுவே, ‘வசுதேவ குடும்பகம’ என்ற சமஸ்கிருத வரிக்கும் பொருந்தும். அதாவது, வடக்கு – தெற்கு என்று பிரித்துப் பேசும் இந்தியாவில், இன்றும் மாறாத ஓர் இழையோட்டம் இருக்கிறது என்றால், அது இது தான்.

இந்தச் சொல்லாடலுக்கு அப்பால், இந்த வரிகள் கூறும் ஆழமான கருத்து என்ன? மேலோட்டமாக பார்த்தால், இந்த வசனங்கள் இரண்டுமே, கடல் கடந்து, சர்வதேசத்திலும் வணிகம் செய்வது குறித்தது என்று எண்ண தோன்றும், குயுக்தியுடன் யோசிப்பவர்களுக்கு, இது போர்ப் பரணியாக கூடத் தோன்றலாம். ஆனால், இந்த வரிகள் கூறுவதெல்லாம் ஒரே விடயம் தான். அதாவது, ‘உலக மக்கள் அனைவருக்கும் உதவி செய்வதற்கு என்று, உனக்கு ஒரு கடமை இருக்கிறது’ என்பதுதான்.

இது குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. மாறாக, இதுவும் வள்ளுவனின் கூற்றுப்படியான ‘செல்விருந்து ஓம்பி, வருவிருந்து காத்திருப்பான், நல்விருந்து வானத்தவர்க்கு’ என்ற குறளின் அடிப்படையிலான தனி மனித தர்மம்தான். அதுவே. நாடு சுதந்திரம் அடைந்த காலம் துவங்கி, இந்தியாவின் அறிவிக்கப்படாத தேசிய கொள்கையாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை.

இந்தியா, அது சுதந்திரம் அடைந்த காலம் துவங்கி, பர்மா அகதிகள், இலங்கை மலையகத் தமிழ் அகதிகள், மற்றும் இடியமீன் காலத்தில் தாய்நாட்டில் அடைக்கலம் தேடி வந்த உகண்டா அகதிகள் என்று அனைத்து மக்களையும் இரு கை நீட்டி வரவேற்றது. அன்றைய சூழலில், கூழோ – கஞ்சியோ அதனை பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பியது. ஆனால், இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில், சிங்களவர்களுடன் சேர்ந்து மலையகத் தமிழர்களை நாடும் உரிமையும் இல்லாதாக்கிய பெருமை, வடக்கு – கிழக்கு தமிழர் தலைமைக்கே உரித்தாகும். ஆனால், அது குறித்து எல்லாம், தற்கால தற்குறிகள் வாய் திறக்க மாட்டார்கள் என்பது தெளிவு.

அந்த வகையில்தான், கடந்த 1971 ஆம் ஆண்டு வங்காள தேசம் பிறந்த காலகட்டத்தில், இந்தியா வந்தடைந்த இலட்சக் கணக்கான அகதிகளை இந்தியா ஏற்றுக் கொண்டது. அடுத்த தசாப்தங்களில், இலங்கையில் உயிருக்கும், உடமைக்கும், பெண்களின் கற்பிற்கும் உத்திரவாதமில்லை என்றாகி விட்ட நிலையில் இந்தியா வந்தடைந்த தமிழர்களையும் தனதாக ஏற்றுக் கொண்டது.

இன்றளவும் இந்தியாவில், மொத்தம் ஒரு இலட்சம் இலங்கை தமிழர்கள் வாழ்கிறார்கள். ராஜிவ் காந்தி படுகொலைக்குப் பின்னரும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து இந்தியா அவர்களுக்கு வாழ்வளித்து வருகிறது. இந்தியாவில் பிறந்த பல இலங்கைத் தமிழ்க் குழந்தைகளுக்கும், இன்றைய இளம் மற்றும் நடுத்தர வயதினருக்கு, அவர்களது தாய்நாடு என்பது இந்தியாதான்.

## அன்றும் இன்றும்

இவை அனைத்துமே, கடந்த காலத்தில், இந்தியாவின் கொள்கை விளக்கமாக மாறவில்லை என்றால், காரணம், இந்திய அரசின் அரசியல் மற்றும் அதிகாரிகளின் தலைமைகள் அந்தக் கோட்பாட்டின் படியே வளர்க்கப்பட்டவர்கள், வாழ்ந்து பழகியவர்கள். இந்தக் கருத்து அவர்களின் இரத்தத்தோடு கலந்தது. அதனைக் கீறிப் பார்த்து, தெளிவுபடுத்திக் கொள்வது, இலங்கைத் தமிழர் தரப்பில் ஒரு சாராரின் துன்பியல் பழக்கம், விகாரமான விவகாரம்.

இதன் காரணமாகவும்தான், இந்தியா, ஐக்கிய நாடுகள் சபையின் வியன்னா மாநாட்டு தீர்மானத்தில் கைசாத்திடாமலே, அகதிகளுக்கான அனைத்து உரிமைகளையும் வழங்கி வருகிறது. இன்னும் சொல்லப் போனால், ஐ.நாவின் அறிவுறுத்தல்படி, இந்தியா, அகதிகளுக்கு என்று தனிச் சட்ட – திட்டம் எதுவும் இயற்றி, பேணவில்லை. ஆனால், அகதிகளைத் தங்கள் மக்களாகவே பேணி வருகிறது.

இந்தியாவின் மனச்சாட்சி படி, அவ்வாறு சட்டம் இயற்றுவது எல்லாம், தன்னையே கீழ்மைப்படுத்திக் கொள்வதற்கு சமம். அது போன்றே, தன்னை அண்டி வந்திருக்கும் மக்களின் நிலைமையைக் கொச்சைபடுத்துவதற்கும் சமம். அதனால் தான், எந்தவித சர்வதேச அழுத்தங்கள் இல்லாத நிலையிலும், அத்தகைய அழுத்தங்களுக்கு வழங்காத நிலையிலும் இந்தியா, தன்னை நாடி வந்த மக்களைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.



இதுவே, உலகின் பிற பகுதிகளில் இருந்தும் இந்தியா மீது படையெடுத்து வந்த பிற இனத்தவர்களுக்கும், மதத்தினருக்கும் மொழியினருக்கும் பொருந்தும். அது போன்றே, வியாபாரம் செய்வதாகக் கூறி, பின்னர் அரசாட்சியை பிடித்த பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் போர்த்துகீசிய நாடுகளுக்கும் பொருந்தும்.

என்றாலும், இந்தியாவின் செயல்பாட்டில், அன்றும் இன்றும் சில நடைமுறை மாற்றங்கள் உள்ளன. முக்கியமாக, முந்தைய தேசியத் தலைமைகள், வெளி உலகில் இந்தியாவின் பெருமை பேசுவதை தற்குறித்தனமாகக் கருதி, தவிர்த்து வந்தார்கள். அவர்களது சொல்லை விட செயல் பேசியது. ஆனால், இப்போதைய அரச பழக்க – வழக்கம் அவ்வாறல்ல.

(10ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

வாரம் ஓர் ஆசனம்



## சலபாசனம் (வெட்டுக்கிளி போன்ற தோற்றம்)

**செய்முறை -**

படி 1. ஆரம்பநிலையில் புஜங்காசனத்தில் கூறப்பட்டது போல் குப்புற படுக்கவும்.

படி 2. இரு கைகளையும் (கைவிரல்களை நன்கு பொத்தியபடி) இரு தொடைகளுக்கு (கீழ்) அடியில் வைக்கவும்.

படி 3. பின் ஒவ்வொரு காலாக மூச்சை இழுத்தவாறு தூக்கி ஒரு நிமிடம் வரை சுவாசிக்கவும். பின் மூச்சை வெளிவிட்டவாறு கீழே விடவும்.

படி 4. பின்னர் இரு கால்களையும் அணைத்தபடி கால்களை மடிக்காமல் மூச்சை இழுத்தவாறு தூக்கவும். ஒரு நிமிடம் வரை ஆழமாக சுவாசிக்கவும். உச்ச நிலை

படி 5. பின் மூச்சை வெளிவிட்டவாறு இரு கால்களையும் விடவும் ஆரம்ப நிலைக்கு வரவும்.

புஜங்காசனத்தின் மாற்றாசனம் இதுவாகும்.

**பலன்கள் :**

புஜங்காசனம் செய்வதால் ஏற்படும் பலன்களை அடையலாம். அத்துடன் சுவாசக் கோளாறுகள்,மார்புச் சளி நீங்கும். இடுப்பு, முதுகின் கீழ்ப்பகுதி, இடுப்பெலும்பு, வயிற்றுப் பகுதி, அதன் சார்ந்த உறுப்புக்கள், தொடைகள், சிறு நீரகங்கள், கால்கள், தசை நார்கள், நரம்புகள் ஊக்கமும் வலிமையும் பெறும். கணையம் நன்கு அழுத்தப்படுவதால் அதன் தொழிற்பாடு அதிகரிக்கும். பாலியல்சார் சுரப்பிகளின் செயற்பாடு தூண்டப்படுவதால் ஆண்மை, பெண்மை நீடிக்கும். மூட்டு,கீல்வாதங்கள், எலும்பு தேய்மானங்கள், நாரிப் பிடிப்பு நீங்கும்.

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)

# செய்ந்நன்றியறிதல்




செய்ந்நன்றியறிதலாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. காரணமின்றிச் செய்த உதவிக்கு, பூமியையுஞ் சுவர்க்கத்தையும் கைமாறாகக் கொடுத்தாலும் அவைக்கு இவை ஈடாகா. காரணமின்றிச் செய்த உதவியாவது தனக்கு முன்னே ஓருதவி செய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்த உதவி. காலத்தினாற் செய்த உதவியாவது ஒருவனுக்கு இறுதி வந்த பொழுது ஒருவன் பிறனுக்குச் செய்த உதவி. காலத்தினாற் செய்த உதவியாவது இவருக்கு இது செய்தால் இன்ன பிரயோசனங் கிடைக்கும் என்று ஆராயாது செய்த உதவி.

இந்த மூன்றுமல்லாத உதவியும் அறிவொழுக்க முடையவருக்குச் செய்த போது, அவருடைய தகுதி எவ்வளது பெரியதோ அவ்வளவு பெரியதாகும். ஆதலினால், அறிவொழுக்க முடையவர், தமக்குப் பிறர் செய்த உதவி தினையளவினதாயினும், அதனை அவ்வளவினதாக நினையாது பனையளவினதாக நினைப்பர்.

யாவராயினுந் தமக்கு நன்றி செய்தவருடைய சிநேகத்தை விடலாகாது.

ஒருவன்றானே முன்பு ஒரு நன்றி செய்து பின்பு தீமை செய்வானாயின், அவன் செய்த அவ்விரண்டினுள்ளுந் தீமையை அப்பொழுதே மறந்து, நன்றியை எப்பொழுதும் மறவாமற் கொள்வதே மிக மேலாகிய தருமம். தமக்கு ஒரு நன்றி செய்தவர் பின்பு நூறு தீமைகளைச் செய்தவராயினும், மேலோர், அந்நன்றி ஒன்றையே உள்ளத்தில் வைத்துத் தீமை நூற்றையும் பொறுப்பர். தமக்கு நூறு நன்றி செய்தவர் பின்பு ஒரு தீமை செய்தவராயினும், கீழோர் அந்நன்றி நூற்றையும் மறந்துவிட்டு, அத்தீமையொன்றின் பொருட்டு அவர்மேல் வைரவஞ் சாதிப்பர்.


மகாபாதகங்களைச் செய்தவருக்கும் பிராயச்சித்தத்தினால் உயர்வு உண்டாகும். ஒருவர் செய்த நன்றியை மறந்தவருக்கு உய்வு இல்லை. செய்ந்நன்றி மறந்தவர் அளவில்லாத காலம் நரகங்களில் கிடந்து துன்புற்று, பின்பு பூமியிலே பிறந்து வாதரோகம், சூலை, மசூரிகை, கட்டம் முதலிய வியாதிகளினால் வருந்தவர்.

- இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து.....

# கோளறு பதிகம்

**பாடல் - 10**

**கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு**
**குணமாய வேட விகிர்தன்**
**மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்**
**திருநீறு செம்மை திடமே**
**அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**



**பொழிப்பு :-**

கொத்துக்கொத்தாய் மலர்ந்த மலர்களைத் தன் தலைமுடியிற் சூடியவளான பார்வதி தேவியோடு கூடியிருப்பவரும், பஞ்சபாண்டவரில் அர்ச்சுனனை மட்டும் தடுத்தாட்கொண்டு, பாசுபதாஸ்திரம் அளித்தவரும், ஆட்கொண்டு அருளும் குணமுடையவரும், வேடன் வேடத்தில் வந்தவரும், ஊமத்தம் பூவையும் சந்திரனையும் நாகத்தையும் தனது செஞ்சடைக்குள் செருகிக் கொண்டவருமான, நீலகண்டனான பரமசிவனார் என் உள்ளமெனும் தாமரையிற் கொலுவீற்று இருப்பதனால் புத்தர்கள், சமணர்கள் போன்றோரையெல்லாம் அண்ணலின் திருநீறே அழித்துவிடும். இது மறுக்க முடியாத, மாற்றமுடியாததொன்று. அப்படியிருக்க அதை அணிந்துகொள்ளும் சிவனடியாரை நல்லன, நல்லன, மிக மிக மிகுந்த நல்லன, நல்லனவே சேரும்.

(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து)



## நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

பகலவனி னொளியதுறு முகமதளி கருணைவழி
பனிருவிழி யுடனருளை - பொழிவேலா
பரிவொடுன அருளருளி உலகுபல துயரமளி
பவமதனி லுழலுநிலை - களையாயோ?
அகமதனி லுறையுமுன தடியிணையை பணியவரு
மடியரது குறையறித - லரிதாமோ?
அவரடையு துயரமற பெறவரிய உனதருளை
அகிலமடை நிலையதனை - அருளாயோ?
எமதிடரை களையவென விடையதினி லதியுயர
எழிலுறுசப் பரமதனில் - வருவேலா
இதயமது குமுறவுள இடமவைக ளலையுமெம
திழிநிலைய தழியவுன - தருளீயாய்
இகமதுறு கலியுகம தனினருளு வரதனென
எவருமுரை புகழதனை - யறியாயோ?
இகபரமு ளனமுழுது மடையுநிலை அருளவென
இணையறுநல் லையினிலுறை - பெரும

- கவிஞர் இராசையா குகதாசன் -

# இலங்கை ராஜபக்ஷர்களின் நாடல்ல அனுர பிரியதர்ஷன யாப்பா காட்டம்

இலங்கை ராஜபக்ஷக்களின் நாடல்ல. ஒரு குடும்பத்துக்கு நாட்டை பொறுப்பாக்கி விட்டு எம்மால் உறங்கிக் கொண்டிருக்க முடியாது.

நாட்டின் நிதியதிகாரத்தைத் தகுதியற்ற தரப்பினருக்கு ஒப்படைத்ததன் விளைவை அரசாங்கம் எதிர்கொண்டுள்ளதுடன், முழு நாடும் அதன் விளைவை எதிர்காண்டுள்ளது என அரச நிதி தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் (கோபா) தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற விசேட விவாதத்தின் போது மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உட்பட நாணய சபையின் உறுப்பினர்கள் கோபா குழுவிற்கு முன்னிலையாகியமை தொடர்பில் சபைக்கு அறிவுறுத்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டின் தற்போதைய மோசமான பொருளாதாரம் மற்றும் சமூக சூழ்நிலையை அரசாங்கம் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும். தகைமையற்ற தரப்பினர் நிதி விவகாரத்துக்கு நியமித்ததன் விளைவை அரசாங்கம் எதிர்கொண்டுள்ளதுடன், முழு நாடும் எதிர் விளைவை அனுபவிக்கிறது.

நாட்டின் நிதி நெருக்கடி தொடர்பில் அரச நிதி தொடர்பிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்கு, முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட நாணய சபையின் உறுப்பினர்கள் முன்னிலையான போது பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி தொடர்பிலும், இறுதிக் கட்டத்தில் ரூபாவை தளம்பல் நிலைக்கு நிலைப்படுத்தியமை தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் குழுவிற்கு குறிப்பிட்ட விடயங்கள் முரண்பட்டனவாகவே அமைந்தன.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் மத்திய வங்கி முன்னெடுத்த தீர்மானங்களை நிதியமைச்சரும், அமைச்சரவையும் அறிந்திருக்கவில்லை. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியை நியமிக்கும் போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல்வேறு தரப்பினரது ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டார்.

தகுதியற்ற தரப்பினர் நாட்டின் நிதி நிலைமையை மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியின் செயலாளர் உட்பட ஒருசில அரச அதிகாரிகள் நிர்வகித்ததன் விளைவை முழு நாடும் தற்போது எதிர்கொள்கிறது. நாட்டின் நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் தயவு செய்து பதவி விலக வேண்டும்.



புதிய அமைச்சரவை ஊடாக தீர்வு காண முடியும் என்று குறிப்பிட்டார்கள். தற்போது கண்டுள்ளார்களா இல்லையே. ஆகவே, அரசாங்கம் யதார்த்த நிலைமையை அறிந்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்து அரசமைப்பு திருத்தம் செய்து நடைமுறைப் பிரச்சினைகளுக்கு நீண்டகாலத் தீர்வு காண முடியும்.

இது ராஜபக்ஷக்களுக்கு மாத்திரம் சொந்தமான நாடல்ல ஒரு குடும்பத்துக்கு முழு நாட்டையும் பொறுப்பாக்கி விட்டு எம்மால் உறங்கிக்கொண்டிக்க முடியாது. தகுதியானவர்களிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்து விட்டு தயவு செய்து வெளியேறுங்கள். – என்றார்.

## வாய் புளித்ததோ, ..........

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது, இருபத்தியோராம் நூற்றாண்டில், செயலை சொல்படுத்தினால் மட்டுமே, பயனாளிகளுக்குக் கூட அந்த செய்தி சென்றடைகிறது. அவசர கால வாழ்க்கை மற்றும் சமூகவலைத் தளங்கள் ஊடாக மட்டுமே செய்தி மற்றும் பொது அறிவு பெறுவது என்று ஒரு தலைமுறை தோன்றிய பின்னர், பிரதமர் மோடி வழியில் சென்று செயலைப் போலவே, செய்தியையும் கொண்டு சேர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகி விட்டது.

அந்த வகையில், இலங்கை ஆகட்டும், அல்லது அண்டை நாடான மாலத்தீவு ஆகட்டும், இது வரை காதும் காதுமாகச் செய்து வந்த பொருளாதார உதவிகளை இந்தியா தம்பட்டம் போட்டு அறிவிக்கும் சூழ்நிலை தோன்றி உள்ளது. அதற்கு ஒரு முக்கிய காரணம், அவ்வாறு உண்மையை உரைக்கவில்லை என்றால், சம கால சமூக வலைத்தளங்களில் வேண்டுமென்றே இந்தியாவிற்கு எதிரான கருத்துக்கள் பதிவிடப்பட்டு, பரப்பப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்த வரையில், அண்மைக் காலத்தில், இந்தியா சார்ந்த திருகோணமலை எண்ணை கிடங்குகள் குறித்த இரு நாட்டு ஒப்பந்தம், மற்றும் வட மாகாணத்தில், இந்திய தனியார் நிறுவனம் ஒன்று நிறுவும் மரபு சாரா எரிசக்தித் திட்டங்கள் ஆகியவற்றை கொச்சைப்படுத்தும் விதத்தில், முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ உள்ளிட்டோர் கருத்து வெளியிட்டனர். இந்தியா ஆதரவு தமிழ்க் கட்சிகள் என்று தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும் எந்த ஒரு கட்சியும் தலைவரும் அதனை எதிர்த்து, உண்மையை எடுத்து ரைக்கவில்லை. இது வழக்கமான, இலங்கைத் தமிழர் தரப்பின் சுயநல அரசியலின் வெளிப்பாடே.

### தலை இருக்க, வால் ஆடியது

கடந்த 2005 ஆம் ஆண்டில், ஐ.நா. சபை, தங்களது ஆட்சியாளர்களின் துன்புறுத்தலுக்கு ஆளாகும் மக்களைப் பாதுகாப்பது, அனைத்து நாடுகளின் கடமையாகும் என்ற தொனிப் பொருளில், 'ரெஸ்பான்ஸிபிலிடி டு ப்ரொட்டக்ட்' (ஆர் டு பி) என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இலங்கை இனப்போரின் பிந்தைய கட்டங்களில், சர்வதேசம் தமிழ் மக்களைப் பாதுகாக்க இந்தத் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து செயலாற்றுவதாக கூறி, ஆனால் செயலாற்றாமல் விட்டு விட்டது.

ஆனால், அதற்கு முந்தைய பனிப்போர் காலகட்டத்தில், சர்வதேச அரங்கில் இந்தியா போன்ற ஏழ்மை நிறைந்த மூன்றாம் உலக நாடு, அமெரிக்கா போன்ற வல்லரசை எதிர்த்து, வங்காள தேசம் மற்றும் இலங்கை இனப்பிரச்சினையில் தைரியமான முன்னெடுப்புகளை எடுத்துச் செயல்பட்டது, ஏதோதான் இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக அல்ல. அல்லது, முறையே பிரதமர் இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தி ஆகியோரின் அரசியல் சித்து விளையாட்டும் அல்ல.

மாறாக, அது இந்தியாவில் இழையோடி உள்ள மனிதாபிமானம் மற்றும் தார்மீக கடமையின் வெளிப்பாடே. அதனை, வங்காள தேச மக்கள் புரிந்து கொண்ட அளவிற்கு, பாக்குநீரிணையால் பிரிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதே வருத்தப்பட வேண்டிய உண்மை. அந்தப் பின்னணியில் இன்னும் வாழ்ந்து வரும் ஒரு சாரார் அதே மனநிலையில் இருக்கிறார்கள் என்பதும் உண்மை.

### தான்தோன்றித் தனம்

ஐ.நா. தீர்மானம் முன்னெடுக்கப்படுவதற்கு இரண்டு, மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே, இந்தியா, மிகத் துணிவுடன் இத்தகைய, புரட்சிகரமான முடிவுகளை எடுத்துச் செயல்படுத்தவும் செய்தது. அதுவே, முதலில் வங்காள தேசம், பின்னர் இலங்கைத் தமிழருக்குப் பாதுகாப்பு என்று உருவெடுத்து, செயல்படுத்தப்பட்டது. இரு தரப்பினர் விடயத்திலும், இந்தியா, சர்வதேச அரசியல் மற்றும் ராஜாங்க ரீதியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்ட அதே சமயத்தில், தங்களது நாட்டில் தங்களையும் தங்களது மக்களையும் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான இராணுவப் பயிற்சியையும், ஆயுதங்களையும் கூட கொடுத்தது.

அதனை இரு நாட்டு மக்களும் பயன்படுத்திக் கொண்ட விதம், அவர்களது வெற்றி – தோல்வியை முடிவு செய்தது எனலாம். வங்காள தேசத்தில், இந்தியா முழு வெற்றி அடைந்தது. காரணம், அந்த நாட்டு மக்களும் தலைமையும் இந்தியாவை முழுமையாக நம்பி செயலாற்றியமை. அவர்களது விடயத்தில், அரசியல் தலைமையும், முக்தி பாஹினி எனப்படும் போராளிக் குழுவும் ஒன்றாக யோசித்து செயல்பட்டன.

ஆனால், இலங்கைத் தமிழர் தரப்பில் நிலைமை தலை கீழ். முதலில், தலை இருக்க வால் ஆடிய கதையாக, மிதவாத அரசியல் தலைமைகளை உதறி தள்ளும் விதமாக, இளைஞர்களின் போராளிக்குழுக்கள் செயல்பட்டு வந்தன. ஒரு காலகட்டத்தில், மூத்த அரசியல் தலைவர்கள் மற்றும் பிற போராளி குழுக்களை, எதிரிகளாகவே பாவித்துப் துவம்சம் செய்து, தமிழர்களின் ஏகோபித்த பிரதிநிதியாக தன்னை விடுதலை புலிகள் இயக்கம் பாவித்துச் செயல்பட்டது.

இன்று, ராஜபக்ஷக்கள் விடயத்தில் 'தெய்வம் நின்று கொல்லும்' என்று வசனம் பேசும் தமிழர் தரப்பு, ஏனோ அதனையே விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கான அளவு கோலாகவும் பாவிப்பதற்கு விரும்புவதில்லை. ஆனால், தெய்வம் என்னவோ, நின்றுதான் கொன்றது. விடுதலை புலிகள் விடயத்தில், சித்திர குப்தன் கணக்கில் ராஜிவ் காந்தி படுகொலையும் அடங்கும்.

இந்தப் பின்னணியில், வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற விதத்தில், இலங்கை தமிழர் தரப்பில் ஒருசாரார், இந்தியாவின் எல்லாவிதநன்முயற்சிகளிலும் ஏதாவது ஒரு விடயத்தை பிடித்துக் கொண்டு குறைகூறி, தங்களது தாகத்தை தீர்த்துக் கொள்கிறார்கள். முட்டாள் தனத்தை வெளிப்படுத்துகிறார்கள். அவர்களை, வெளிநாடுகளில் இருந்து ஆட்டிபிழைக்கும் சூத்திரதாரிகளுக்கு அவர்களது அரசியலும், அதனாலான பிழைப்பும் மட்டுமே முக்கியம்.

அவர்களுக்கு, இனப்போர் காலகட்டத்திலும் சரி, தற்போதைய பொருளாதாரப் பின்னடைவு நிலையிலும் சரி, இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் அடுத்த வேளை சோற்றிற்கு என்ன செய்யப் போகிறார்கள் என்றெல்லாம் கவலை இல்லை. ஏழ்மையை வைத்து அரசியல் செய்வதை, அவர்கள் இலாபகரமான ஒரு தொழிலாக, வியாபாரமாகவே ஆக்கி விட்டார்கள். அவர்களை பொறுத்த வரையில், சொந்த காரியம் சிந்தாபாத். அவ்வளவுதான்!

## அமைதியான போராட்டத்தை குழப்பியவர்கள் பொலிஸாரே!

### பாதிக்கப்பட்டவர் தகவல்

ரம்புக்கனையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் போது வன்முறையை தூண்டிவிட்டது பொலிஸார் என சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் தெரிவித்துள்ளார்.

வீதிகள் மறைக்கப்பட்ட போதிலும் ஆரம்பம் முதலே அமைதியான போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் காரணமின்றி பொலிஸார் கண்ணீர் பிரயோகம் மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் ஒரு துளி இரத்தம் சிந்தியிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்காது என அவர் கூறியுள்ளார்.

பகல் உணவு சமைத்து அமைதியாக ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோம். அங்கிருந்த பொலிஸாருக்கும் கேக் வழங்கியிருந்தோம். எனினும் கண்ணீர் பிரயோகம் மேற்கொண்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டது.

பொலிஸார் பொறுப்புக் கூற வேண்டும். மக்களின் வயிற்றை நோக்கியே துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டிருந்தார்கள்.

இந்தச் சம்பவத்துக்கு பொலிஸ் மா அதிபர் மற்றும் பொலிஸார் பொறுப்புக் கூற வேண்டும். பொலிஸாரின் துப்பாக்கிக் குறி வைத்தமை தொடர்பில் சந்தேகமாகவே உள்ளது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மட்டு. கொக்குவில் அழுகிய நிலையில் ஆணின் சடலம்

மட்டக்களப்பு, ஏப். 22

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவில், பனிச்சையடி பகுதியில் உள்ள வெற்றுக் காணியின் கிணறு ஒன்றில் உருக்குலைந்த நிலையில் அடையாளம் காணப்படாத நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுப் புதன்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கிணற்றில் இருந்து துர்நாற்றம் வீசிய நிலையில் பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியமையையடுத்து நேற்று மாலை 4 மணியளவில் உருக்குலைந்த நிலையல் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

இந்தச் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை: நீதிமன்ற அனுமதியைப் பெற்று சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=